**கொடிகாவத்த முல்லேரியா பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொடிகாவத்த முல்லேரியா பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடிகாவத்த முல்லேரியா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 வேறு சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் தொடர்பாக விசேட பிரமாணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் அடிப்படையில் பிரதேச சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டினை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)( iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் அடிப்படையில் முன்னைய வருடம் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் உள்ளடங்கியுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புகள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை அரச துறை கணக்கீட்டு தரங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்துடன் தொடர்புடைய இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்** | | |
| (அ) | நியமத்தின் 3.6 பிரிவின் பிரகாரம் நடப்பாண்டின் நிதிக்கூற்றுக்கள் காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து பெறுமானங் களுக்காக முன்னர் சமப்படுத்த கூடிய காலப்பகுதி தொடர்பாக ஒப்பீடு செய்யக்கூடிய தகவல்கள் சமப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் விரிவான வருமானக் கூற்றிலும் காசுப்பாய்சச்ல் கூற்றிலும் முன்னைய ஆண்டின் தகவல்கள் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை | புதிய கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்படுகின்ற முதலாவது நிதிக் கூற்றுக்கள் இதுவாக இரு ப்பதால் அடுத்த ஆண்டுகளில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். | நியமங்கள் மற்றும் வர்த்தமானி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்ப வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நியமத்தின் 3.9 பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுகளில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் அதாவது ஆரம்ப பாதீடு, இறுதி பாதீடு மற்றும் இதற்கிடையே போதியளவு வேறுபாடு இருந்தால் அவற்றிற்கு தேவையான வெளிப்படுத்தல் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் காலங்களில் குறித்த வெளிப்படுத்தல்களை மேற்கொள்கின்றேன் | நியமங்கள் மற்றும் வர்த்தமானி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்ப வேண்டும் |
| (இ) | நியமத்தின் 9.9 பிரிவின் பிரகாரம் ஏனைய விரிவான வருமானத்தில் உள்ள மீண்டெழும் தன்மையிலான அரசிடமிருந்து கையளிக்கும் உரிமையின் புறம்பான கூறுகளாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது சீராக்க நடவடிக்கை எடுப்பேன் | நியமங்கள் மற்றும் வர்த்தமானி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்ப வேண்டும் |
| (ஈ) | நியமத்தின் 9.15 ஆம் பிரிவின் பிரகாரம் சபை இழப்பீடுகளில் தண்டப்பணத்ததின் பிரகாரம் பொருத்தமான காலப் பகுப்பாய்வுடன் தண்டப் பணமாக இனங்காணப்பட்ட மீண்டெழும் செலவினம் வெளிப்படுத்தப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சீர்செய்து கணக்குகளை சமர்ப்பிப்பேன் | நியமங்கள் மற்றும் வர்த்தமானி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்ப வேண்டும் |
| (உ) | நியமத்தின் 11.10 ஆம் பிரிவின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் 11.11 ஆம் பிரிவின் பிரகாரம் நிகழத்தக்க சொத்துக்கள் தொடர்பாக வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சீர்செய்து கணக்குகளை சமர்ப்பிப்பேன் | நியமங்கள் மற்றும் வர்த்தமானி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்ப வேண்டும் |
| (ஊ) | நியமத்தின் 15.13 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் பரிமாற்றப்படும் பரிமாற்றம் இடம் பெறாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெற வேண்டியவற்றை அறவிட முடியாதென பதிவழிக்கும் ஏதேனும் பெறுமதி மற்றும் அதற்கான அங்கீகாரம் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதும் ரூபா 306,989 ஆன இனங்காணப்படாத களஞ்சிய இருப்பு தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டில் சீர்செய்து கணக்குகளை சமர்ப்பிப்பேன் | நியமங்கள் மற்றும் வர்த்தமானி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்ப வேண்டும் |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மூலதன நன்கொடைகளின் கீழ் மேற்கொள்ளப்படும் வியாபாரக் கடன் கொடுத்தோர் கணக்கிடப்படும் பொழுது நடைமுறையில் உள்ள வேலைகள் என ரூபா. 76,795,596 பெறுமதியான பாதைகள், ரூபா. 1,168,683 பெறுமதியான கட்டடங்கள் மற்றும் ரூபா. 4,487,891 பெறுமதியான சிறுவர் பூங்காக்கள் என மொத்தமாக ரூபா. 82,452,170 தொகை நிதியல்லாத சொத்துக்களாக கணக்கிடப்படுவதற்குப் பதிலாக மீண்டெழும் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டு நடைமுறையில் உள்ள வேலைகள் என பேரேட்டுக் கணகொன்று ஆரம்பிக்கப்பட்டு இணக்கம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன் என தயவுடன் தெரிவிக்கிறேன். | நடைமுறையில் உள்ள வேலைகளை முறையாக கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடன் ரூபா. 7,211,200 தொகை கணக்கிடப்பட்டிருந்ததுடன் மீண்டும் அத் தொகை அறவிடப்படக்கூடிய பயன்பாட்டு சேவைக் கடன் கணக்கு என நடைமுறைச் சொத்தாகவும் கணக்கிடப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்கள் அத் தொகையினால் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன் | சரியாக கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் மாகாண சபையின் மூலம் முத்திரைக் கட்டணம் வழங்கப்படும் போது கம்பெக்டர் வாகன கடன் தவணைக் கட்டண தொகையாகிய ரூபா. 6,668,000 இனை முத்திரைக் கட்டணத்திலிருந்து கழித்து கம்பெக்டர் வாகன கடன் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக பல்வேறு செலவுகள் எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் | 2021 இற்கான கணக்கைத் தயாரிக்கும் பொழுது மாகாண சபைக் கணன் கணக்கின் கீழ் குறித்த செலவினத்தை மேற்கொள்வேன் | கடன் தவணைக் கொடுப்பனவினை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் மீளாய்வாண்டின் மீண்டு வரும் வரவினை விஞ்சிய செலவு ரூபா. 6,668,000 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | நிதிக் கூற்றுகளின் அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் சேவைக் கட்டணமாகிய ரூபா. 8,579,289 தொகையாகிய நடைமுறைப் பொறுப்புக் கணக்கொன்று இருந்த போதும், அதனுடன் தொடர்பான வங்கிக் கணக்கில் அத் தொகைக்குப் பதிலாக ரூபா. 2,229,289 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக ரூபா. 6,350,000 இனால் நடைமுறைப் பொறுப்புகள் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டுடன் தொடர்பான மூலதன ஒதுக்கீடு ரூபா. 165,076,733 ஆகவிருந்த போதும் அது விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானங்களின் கீழ் ரூபா. 89,830,010 எனக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா. 75,246,722 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் மீண்டெழும் செலவினம் அல்லாத செலவினங்களுக்கான மூலதன ஒதுக்கீடு ரூபா. 7,708,776 ஆகவிருந்த போதும் அது ரூபா. 165,076,733 என கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா. 157,367,955 இனால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். | பெறப்படும் மூலதன ஒதுக்கீட்டினை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் இனங்காணப்படாத மூலதன ஒதுக்கீடுகள் ரூபா. 157,367,955 ஆகவிருந்த போதும் அது கணக்கீடு செய்யப்படாதிருந்ததன் காரணமாக பெறுமதி அத் | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (எ) | மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய நிதிப் பெறுவனவுகள் ரூபா. 82,452,170 தொகையானது 51 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் மீண்டும் 49ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் ரூபா. 82,624,561 கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துகள் கூடுதலாக கணக்கிடப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | முன்னைய ஆண்டிற்கான மூலதனச் செலவு ரூபா. 35,216,453 தொகைக்கான கடன் கொடுத்தோர் ஒதுக்கப்படாததன் காரணமாக அதனை சீர் செய்வதற்காக மீளாய்வாண்டில் ஆதனங்கள் சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் அல்லது நடைமுறை வேலைகளின் கீழ் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | 48 ஆம் இலக்க மற்றும் 52 ஆம் இலக்க நாட்குறிப்புகள் மூலம் பொது களஞ்சியத் தொகைக் கணக்கு ரூபா. 5,739,637 மற்றும் மின் களஞ்சியத் தொகைக் கணக்கு ரூபா. 998,326 வரவு வைக்கப்பட்டு குறித்த கடன் கொடுத்தோர் கணக்குகளில் இரண்டு முறை செலவு வைக்கப்பட்டிருந்தன. 2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்று பொது களஞ்சிய கடன் கொடுத்தோர் மற்றும் களஞ்சிய மின் இருப்பு கூட்டுத்தொகை ரூபா. 6,737,963 இனால் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2020 திசெம்பர் 31ஆம் திகதியன்று ரூபா. 11,874,863 பெறுமதியான 20 வியாபாரக் கடன் கொடுத்தோர் மற்றும் ரூபா. 483,673 பெறுமதியான 11 | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது சீர் செய்வதற்கான | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| செலவினக் கடன் கொடுத்தோர் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நடைமுறைப் பொறுப்புகள் மற்றும் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் அத் தொகையினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுப்பேன். |

**1.6.3 இணகங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 கணக்கு விடயங்களுடன் தொடர்பான நிதிக்கூற்றுகளின் அடிப்படையிலான பெறுமதிகள் மற்றும் அட்டவணை அடிப்படையிலான பெறுமதி களுக்கிடையே ரூபா. 211,181,175 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் ஆண்டில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆவணங்கள் மற்றும் அட்டவணைகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் காணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக ரூபா. 82,931,551 பெறுமதியான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை | எதிர்வரும் ஆண்டில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குறித்த அங்கீகாரம் மற்றும் விபரங்கள் அடங்கிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 645,242,866 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 96,343,250 ஆக இருந்தது.

## 2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீதவரி மற்றும் வரி** | | |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் நிலுவையாகவிருந்த வீதவரியின் பெறுமதி ரூபா. 51,006,925 ஆக இருந்தது | 2020 இல் ஏற்பட்ட கொவிட் தாக்கம் காரணமாக வருமானம் சேகரிப்பிற்கான நடமாடும் சேவைகள், ஆதனங்களை தடை செய்தல் ஆகிய போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் போனது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| **(ஆ) கடை வாடகை** | | |
| சபைக்குச் சொந்தமான பழைய சந்தையில் உள்ள 837.22 சதுர அடி அளவிலான 08 கடைகளிலிருந்தும் வர்த்தக கடைத் தொகுதியில் உள்ள 1441.86 சதுர அடி அளவிலான 116 கடைகளிலிருந்தும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைக் கடை வாடகை ரூபா. 12,234,955 ஆக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டினுள் 76 கடைகளிலிருந்து எந்தவித வாடகையும் அறவிடப்படா திருந்ததுடன் இவற்றில் அறவிடப்பட வேண்டியிருந்த மொத்த நிலுவை வாடகை ரூபா. 4,911,360 ஆகவிருந்தது. | 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புதிய மதிப்பீடு காரணமாக இதற்கு எதிராக வாடகையாளர்கள் வாடகை செலுத்தாமல் இருந்தமை யால் Covid -19 நிலைமை காரணமாக மதிப்பீட்டு செயன்முறை தொடர்பான தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் போனதுடன் 2021 இல் இதனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிடுகிறேன் | நிலுவை கடை வாடகையினை தெகைகளை அறவீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |